OS.70/2022

நாள். 14.08.2025

பி.வா.சா.1 – ராஜேந்திரன்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

இந்த வழக்கு சம்மந்தமாக நான் எத்தனை வழக்கறிஞரை பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் நடராஜன் என்ற வழக்கறிஞர் மூலம் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தெரியாது. 13.10.2022 ம் தேதி செந்தில் குமார் என்ற வழக்கறிஞரை வைத்து நான் வக்காலத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. தற்போது விமல்ராஜ் என்ற வழக்கறிஞரை வைத்து வக்காலத்து தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் தெரியாது. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம், எதிர்வழக்குரையை படித்து காண்பித்து கைரேகை வைத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் வழக்கறிஞருக்கு விவரம் சொன்னேனா என்றால் இல்லை. என் மகள் சத்யா , மருமகன் தாமரை செல்வம் ஆகிய இருவரும் ஏதாவது ஒரு ஆவணத்தை காட்டி கைரேகை வைக்கச்சொன்னால் வைத்துவிடுவேனா என்றால் இல்லை. நான் விவரம் தெரிந்த பிறகுதான் கைரேகை வைப்பேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ல் உள்ள கைரேகையை வைக்கும்போது யார்யார் இருந்தார்கள் என்றால் வாதி பாலு மற்றும் அவருடன் வந்த 4 பேர்கள் இருந்தார்கள். எதுவும் எழுதாத வெத்துப்பேப்பரில் கைரேகை வாங்கினார்கள். நான் கைரேகை வைப்பதற்கு இங்க்பேட் யார் வீட்டில் இருந்தது என்றால் என் வீட்டில். வாதி மற்றும் அவருடன் வந்தவர்கள் எவ்வளவு நேரம் என் வீட்டில் இருந்தார்கள் என்றால் அரை மணிநேரம். என் வீட்டு சார்பாக யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. நான் கடனுறுதி சீட்டு ஆவணத்தை எழுதிக்கொடுத்துவிட்டு ரூ.17 இலட்சம் பெற்றுக்கொண்டேன் என்றும், வாதியை ஏமாற்றுவதற்காக ரூ.17 இலட்சம் பெறவில்லை என்றும் வாதி கொடுக்கவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்

தரப்பில் அனுப்பிய பதில் அறிவிப்பில் வாதி வட்டிக்கு பணம் கொடுப்பதாகவும், ரியல்எஸ்டேட் தொழில் செய்வதாகவும், பைனான்ஸ் தொழில் செய்வதாகவும் சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் மருமகன் தாமரை செல்வம் வாதியிடம் கடன் பெற்றுள்ளதுபோல் வேறு எத்தனை நபர்களுடன் கடன் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் எழுதிக்கொடுத்த கடனுறுதி பத்திரத்தில் என் மகள் சத்யாவும், மருமகன் தாமரை செல்வமும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றும், அவர்களை நான் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிக்க தேவையில்லை. 2015 ம் ஆண்டு வாதியிடம் ரூ.15 இலட்சம் வாங்கினோம் என்றும் அந்ததொகைக்கு ஆதரவாகத்தான் 12.10.2020 ம் தேதி அடமான ஆவணமும், அதே தொகைக்குத்தான் நான் 02.08.2021 ம் தேதி வாதி கடனுறுதி ஆவணமும் எழுதி கொடுத்தேன் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்உரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் என் மகள் என்னை ஏமாற்றி கடனுறுதி ஆவணத்தில் கைரேகை பெற்றுக்கொண்டார் என்றும் எனது சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களை வாதியிடம் கொடுத்துவிட்டார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 02.08.2021 ம் தேதி நான் வாதியிடம் ரூ.17 இலட்சம் கடன் பெற்றேன் என்றும் அந்த தொகைக்குத்தான் அதேதேதியில் கடனுறுதி ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றும் அதனால் நான் வட்டியும், அசலும் செலுத்த கடமைபட்டவன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கு வழக்குரையில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.